Registered as a NewsPaper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 19 (01 - 04 - 1992) புதன்கிழமை ஓசை: 43

## பட்டதாரி பயிலுனர் ஆசிரிய நியமனம் வழங்க பணிப்பு

பட்டப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள க. பொ. த. உயர்தர பயிலுனர் ஆசிரி யர்களைப் பட்டதாரி பயிலுனர் ஆசிரிய வகைக்கு சில கல்விப் பணிப்பாளர்களால் மாற்றம் செய்யப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வகையினைச் சேர்ந்த ஒரு சில ஆசிரிய ஆசிரியைகளை இதுவரை பட்டதாரி பயிலுனர் வகையின ராக மாற்றம் செய்யப்படவில்லை என்று கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது இவ்வாறான கோரிக்கைகள் கிடைத்திருப்பின், அவை தொடர்பாக அவசர நடவடிக்கை எடுக்குமாறு கல்விச்சேவை ஆணைக் குழுவின் சுற்று நிருபம் இல 92/07 அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளது.

# ராஜீவ் காந்தி ஊழல் விவகாரம்

# வெளியுறவு மந்திரி இராஜினாமா

## இந்திய அரசுக்கு புதிய தலையிடி

(டில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். அண்மையில் சுவிட்சலாந்து சென்றிருந்த அமைச்சர் சோலங்கி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சம்பந்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாக சுவிட்சலாந்து வெளியுறவு அமைச்சருடன் உரையாடியதாகவும் கடிதம் ஒன்றைக் கையளித்ததாகவும், இந்திய பாராளுமன்றத்தில் எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்தே அமைச்சர் சோலங்கி தமது பதவியைத் துறந்துள்ளார்.

இத்தகவலை இந்திய பாராளுமன்ற விவகார அமைச்சர் குலாம் நபி ஆசாத் நேற்று அறிவித்தார்.

அமைச்சர் சோலங்கி கடந்த ஜனவரியில் சுவிட்சலாந்திற்கு விஜயம் மேற்கொண்டபோது அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் குறிப்பொன்றை சமர்ப்பித்திருந்தார். இந்தக் குறிப்பில் சுவிட்சலாந்து நீதிமன்றமொன்றில் விசாரணையில் இருக்கும் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பான வழக்கின் நடவடிக்கைகளை தாமதப்படுத்துமாறு கோரப்பட்டிருந்ததாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர் சோலங்கி அந்நாட்டு வெளியுறவு அமைச்சரைத் தாம் மரியாதையின் நிமித்தம் சந்தித்ததாகவும் அந்தச் சந்திப்பின்போது இந்திய வழக்கறிஞர் ஒருவர் தந்த குறிப்பொன்றை மட்டுமே அவரிடம் சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

இந்தக் குறிப்பில் இந்திய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் இவ்வழக்கில் இப்போதைய நிலைமை மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளதாகவும் இந்திய லோக்சபாவில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்தார். அத்துடன் தனது இந்தச் செயலுக்குக் கவலை தெரிவித்தார்.

அமைச்சர் கூறிய விடயங்களைவிட கூறாத விடயங்களே அந்தக் குறிப்பில் அதிகம் இருப்பதாக கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அமைச்சர் சோலங்கி ராஜினாமாச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

சோலங்கிக்கு எதிராக லோக்சபாவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவரப்போவதாக எதிர்க் கட்சிகள் தெரிவித்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அமைச்சின் கடமைகளை ராவ் பொறுப்பேற்றார்

(டில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கியின் இராஜினாமாக் கடிதத்தை ராஷ்டிரபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

## க. பொ. த. (உ/த) பரீட்சை திட்டப்படி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் க.பொ.த உயர்தரப்பரீட்சை இன்று திட்டமிட்டபடி நடைபெறும் என யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

இங்கு எழுபது நிலையங்களில் மொத்தம் 9998 மாணவர்கள் இவ்விசேட பரீட்சைக்கு தோற்றுகின்றனர்.

இப்படி பரீட்சை சிறப்புற நடைபெற அனைவரையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## வறுமை நிவாரண உதவியில் 3,43,734 மோசடிகள்

[கொழும்பு]

வறுமை நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் 700ரூபாவுக்கு குறைவாக வருமானம் பெறும் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இந்நிவாரண உதவியை 700 ரூபாவுக்குமேல் வருமானம் பெறுபவர்கள் பெற்று வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கள்ளத்தனமாக உணவு முத்திரைகளை பெற்று வரும் சுமார் மூன்று லட்சத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வந்த அகதிகள் பெரும் அவதிப்படுகின்றனர்

(வவுனியா)

தமிழகத்திலிருந்து திருக்கோணமலை வழியாக வவுனியா வந்து சேர்ந்த அகதி மக்கள் வவுனியா அகதி முகாமில் பெருந்துயரை அனுபவித்து வருகின்றனர்.

இந்த அகதி மக்கள் சிறை வைக்கப்பட்டிருப்பதைப் போல குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அகதி மக்கள் வேதனைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இதே சமயம் சிங்களக் காடையர்களினாலும் இராணுவத்தினராலும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்த அகதி மக்கள் அனைவருக்கும் சிறிலங்கா அரசு எதுவித பணஉதவியும் செய்து கொடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது (தி)

## ...கள் தலைவர்களை கைது செய்ய சட்ட பூர்வ நடவடிக்கை பற்றி ஆராய்வு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் பிரபாகரனையும், பொட்டம்மானையும் கைது செய்வதற்கு மேலும் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக ...யமைச்சர் பி ஆர். குமரமங்கலம் நேற்று முன் தினம் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பிரபாகரனும் பொட்டம்மானும் தனி நீதிமன்றத்தின் முன் ஆஜராகவேண்டுமென உத்தரவிடப்பட்ட காலக்கெடு முடிந்துவிட்டது என்றும் இதுவரை அவர்கள் ஆஜராக

## அம்பாறை ராணுவ கெடுபிடி; 20க்கு மேற்பட்டோர் கைது

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் இராணுவச் சுற்றிவளைப்புக்கள், கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன, கடந்த நான்கு தினங்களில் 20க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்கும் சமூகவிரோதிகளுக்கும் அஞ்சி காட்டுப்பகுதிகளில் குடிசைகளில் வசிக்கும் தமிழர்களின் குடிசைகள் பிரித்தெறிப்பட்டுள்ளன.

குடும்பிமலைப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினர் 10க்கு மேற்பட்ட குடும்பத் தலைவர்களை பிடித்துச்சென்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## திட்ட அமுலாக்கல் அதிகாரி உ. பணிப்பாளராக நியமனம்

யாழ். மாவட்டத்தில் உள்ள திட்ட அமுலாக்கல் அலுவலர்கள் அனைவரும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள அலுவலகங்கள் பலவற்றில் பல வருடங்களாக திட்ட அமுலாக்கல் அலுவலர்களாகக் கடமையாற்றி வந்த முப்பதுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கே இப்பதவி மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்று நிருபம் திட்ட அமுலாக்கல் அமைச்சின் தலைமையலுவலகத்திலிருந்து சகல மாவட்ட அரச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பதவி மாற்றம் பெறும் ஊழியர்கள் பெரும்பாலும் அடுத்தமாதம் நடுப்பகுதியிலிருந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் என செயலக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது (க)

## வெளிவாரி பரீட்சை 4 ஆம் திகதி ஆரம்பம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் வர்த்தக முதல் தேர்வு வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (பா)

## ...கைது செய்ய சட்ட பூர்வ நடவடிக்கை பற்றி ஆராய்வு

(டில்லி)

ராஜீவ் சாந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் ...தப்படும் பிரபாகரனை ..., பொட்டம்மானையும் ... செய்வதற்கு மேலும் ...டபூர்வமான நடவடிக்கை எடுப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக ராஜ்யசபாவில் சட்டம் மற்றும் நிதித்துறையின் இணையமைச்சர் பி ஆர். குமரமங்கலம் நேற்று முன் தினம் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

பிரபாகரனும் பொட்டம்மானும் தனி நீதிமன்றத்தின் முன் ஆஜராகவேண்டுமென உத்தரவிடப்பட்ட காலக்கெடு முடிந்துவிட்டது என்றும் இது வரை அவர்கள் ஆஜராக வில்லையென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

...குறிப்பில் சுவிட்சலாந்து நீதிமன்றமொன்றில் விசாரணையில் இருக்கும் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பான ...திய வழக்...

...தந்த ...றிப்பொன்றை மட்டுமே அவரிடம் சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

## அமைச்சின் கடமைகளை ராவ் பொறுப்பேற்றார்

(டில்லி)

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கியின் இராஜினாமாக்கடிதத்தை ராஷ்டிரபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

...களைவிட கூறாத விடயங்களே அந்தக் குறிப்பில் அதிகம் இருப்பதாக கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அமைச்சர் சோலங்கி ராஜினாமாச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

சோலங்கிக்கு எதிராக லோக்சபாவில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவரப்போவதாக எதிர்க் கட்சிகள் தெரிவித்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

...அரச திணைக்கள அலுவலகங்கள் பலவற்றில் பல வருடங்களாக திட்ட அமுலாக்கல் அலுவலர்களாகக் கடமையாற்றி வந்த மு...பதுக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கே இப்பதவி மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான சுற்று நிருபம் திட்ட அமுலாக்கல் அமைச்சின் தலைமையலுவலகத்திலிருந்து சகல மாவட்ட அரச செயலகங்களுக்கும் அனுப்பி...

...வட்டாரங்கள்... வருகிறது (க)

## வெளிவாரி பரீட்சை 4 ஆம் திகதி ஆரம்பம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் வர்த்தக முதல் தேர்வு வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (பT)

# அரசியல் இராணுவ செயல்பாடு மந்தம்

# குழம்பிய நிலையில் அரசாங்கம்

(கொழும்பு)

தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் பிரேமதாசா அரசாங்கம் மேற்கொண்ட அரசியல் இராணுவ அணுகுமுறைகள் மந்த நிலையை அடைந்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அதேவேளை பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ளும் இருமுனை அணுகுமுறை பெரும்பாலும் தோல்வியைக் கண்டுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான, இடைவிடாத மின்வேகத் தாக்குதல்கள் இராணுவ தரப்பில் பேரிழப்பை ஏற்படுத்தியதால் இராணுவத்தினரின் போர் முறைத் திட்டமும், தந்திரோபாயமும் முறியடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இராணுவத்தின் மனோவுறுதியும் தளர்ந்துள்ளது இந்த நிலையில் அடுத்து என்ன செய்வது என்பதை அறியாது இராணுவத் தலைமைப்பீடம் குழம்பி நிற்கிறது.

இது இவ்வாறிருக்க புலிகள் சம்பந்தமாக பாராளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொண்ட புத்திசாலித்தனமற்ற நிலைப்பாடும் அரசியல் ரீதியான சமரச முயற்சிகளுக்கு ஆப்பு வைத்துள்ளன. யாழ்ப்பாணம் விஜயம்செய்து தமிழ் மக்களை நேரில் சந்திக்க மறுத்ததுடன் எழுத்துமூலம்யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டுமென புலிகள் மீது நியாயமற்ற நிபந்தனைகளை விடுத்தும் தெரிவுக்குழுவினர் நிலைமையை குழப்பியுள்ளனர்.

இவ்விதம் இராணுவ அரசியல் ரீதியான அணுகு முறைகள் சிக்கலடைந்துள்ளதால் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் விவகாரத்தில் பிரேமதாசா அரசு செய்வதறியாது தடுமாறுவதாக கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

## விசர்நாய்க்கடி தடுப்பூசி; அனுப்ப கோரும் தீர்மானம்

'யாழ் மாவட்டத்தில் விசர் ...ய்க்கடியினால் பாதிப்புக்குள்ளாகின்ற மக்களை மரணத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, யாழ்மாவட்டத்திற்குத் தேவையான விசர் நாய்த் தடுப்பு மருந்துகளை உடனடியாக அனுப்பி வைக்க ஆவன செய்தல் வேண்டும் என சிறிலங்கா அரசைக் கோருவது' என நேற்றைய தினம் யாழ். வை. எம். சி ஏ. மண்டபத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசர் நாய்க்கடியின் பாதிப்பும் அதற்கான எதிர்கால உடன்நடவடிக்கையும் எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்...

[4 ஆம் பக்கம் பார்க்க]

வடமராட்சியில்

## அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி)

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவாக நினைவஞ்சலிக் கூட்டமும் அடையாளஉண்ணாவிரதமும் இன்று வடமராட்சிப் பிரிவில் கரணவாய் கிழக்கு ஜனசக்தி சன ...மூக நிலையத்தினரால் உச்...ப அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

உண்ணாவிரதம் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறும். பிற்பகல் 4.00 மணியளவில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா அவர்களால் இவ் உண்ணாவிரதம் முடித்து வைக்கப்படும்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் வடமராட்சி மகளிர் முன்ன...

(4ஆம் பக்கம் பார்க்க)

...ன்னை பூபதி

## ...னைவஞ்சலிக் கூட்டமும் உண்ணா விரதமும்

(யாழ்ப்பாணம்)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும், நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று உடுவில் வட்டவைப் பிரிவில் மைலணி முருகன் கோயிலில் நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை இடம் பெறும். நினைவஞ்சலிக் கூட்டம் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும். இந்த கூட்டத்தில் சோபன், தேவர், மதிவாணி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன.

## வீரச்சாவு ஜெகநாத், சித்தன்

மணலாறு காட்டுப் பகுதியில் இயக்க வேலைக்கென சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது கடந்த 28 ஆம்திகதி சிறிலங்கா இராணு...

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சையை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது

இன்று முதல் மறு அறிவித்தல் வரை இப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் பிற்பகல் 6.00 மணி தொடக்கம் காலை 6.00 மணிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாதயாத்திரை இன்று முடிவு; கதிர்காமத்தில்பொதுக்கூட்டம்

(கொழும்பு)

எதிர்க் கட்சிகள் நடத்தும் பதினேழு நாள் பாதயாத்திரை இன்று கதிர்காமத்தில் முடிவடைய இருக்கிறது.

அரசின் தனியார் மயமாக்கல் பொருளாதாரக் கொள்கை மற்றும் ஆள்கடத்தல், காணாமற் போதல் ஆகியவற்றைக் கண்டித்தே 180 மைல் நீளமான இந்தப்பாதயாத்திரை.

பாதயாத்திரை மதச்சடங்குகளினுடனும், பிற்பகலில் பொதுக் கூட்டம் ஒன்றுடனும் முடிவடையும். சுமார் ஒருலட்சம் மக்கள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜே. வி. பி. இயக்கத்திற்கு பிறகு அரசுக்கு எதிராக நடத்தப்படும் பிரசாரங்களில் இது முக்கியமானது என்று சொல்லப்படுகிறது.

## சிறிலங்காவிற்கு புதிய அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

கிழக்கு மற்றும்தென்னாசிய விவகாரங்களில் தேர்ச்சிமிக்க ஒருவர் விரைவில் சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

திருமதி ரெறிரிட்டா ஸ்காவ் வர் எனப்படும் இவர் தற்சமயம் கிழக்கு மற்றும் தென்னாசிய விவகாரங்களுக்கான பதில் உதவிச் செயலாளராக கடமை புரிகின்றார்.

தற்போது கொழும்பிலிருக்கும் அமெரிக்கத் தூதுவரான மரியன் கிறைக்மோர் மென்மையான சுபாபமும், இதமாகப் பேசக்கூடியவரும் ஆவார். ஆனால் அவரது இடத்திற்கு விரைவில் நியமனம் பெறவிருக்கும் திருமதி ஸ்காவ்வர் கடினப் போக்குடையவர் எனவும், சிறந்த இராஜதந்திரி எனவும் கூறப்படுகின்றது.

## அரச புகையிரத சேவை அதிகார சபையாக மாற்றம்

இலங்கை அரசாங்கப் புகையிர சேவையை (சி. ஜி. ஆர்) அதிகார சபையாக மாற்ற விரைவில் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப் படவுள்ளது. போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சர் விஜயபால மென்டிஸ் இதனைத் தெரிவித்தார்.

புகையிரத சேவை இப்போது நஷ்டத்தில் செயற்படுவதாகக் கூறிய அமைச்சர் புதிதாக அமைக்கப்படவிருக்கும் புகையிரத அதிகார சபை இந்த நஷ்டத்தை ஈடு செய்யும் என்றார்.

இலங்கைப் புகையிரத சேவை வருடமொன்றுக்கு 45 கோடி ரூபா நஷ்டம் காட்டுகிறது.

## சிந்தனைக்கு

விழிகளுக்கு வெளிச்சம், சுவாசப் பைகளுக்குள் காற்று. இதயத்துக்கு அன்பு. அது போலவே மனித ஆன்மாவுக்குச் சுதந்திரம்.

— ராபர்ட் ஜி. இங்கர்ஸால்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 01-04-1992

தொலைபேசி

ஆசிரியபீ ம் 021-2839 நிர்வாகம் 2308

த பெ எண் 05

## ஆக்கிரமிப்பு இராணுவமும் விடுதலைப் போராளியும்

சிறிலங்கா இராணுவ அமைப்பில், ஒழுக்கமும், சட்டுப்பாடும் சீர்குலைந்து வருவதாகவும் வடக்கு, கிழக்கு யுத்த முனையில் விடுதலைப்புலிகளுடன் போரிட்ட இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் லீவில் வீடு சென்றால், திரும்பவும் போர்க்களத்திற்குச்செல்ல விரும்பவில்லை எனவும் ஐலண்ட் பத்திரிகையின் அவதானிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. இதனால், இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து வடக்கு கிழக்கில் அரசின் அதிகாரத்தை நிலைநாட்டுவது என்பது பலத்த பின்னடைவிற்கு உள்ளாகக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை உறுதிப்படுத்துமாப்போல் உள்ளது சிறிலங்காராணுவத் தளபதிலெப்.ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா அண்மையில் வெளியிட்டுள்ள கைநூலில் இராணுவத்தினரின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனபற்றி வலியுறுத்தப்பட்டுள்ளமையாகும். இக் கைநூலில் புலிகளின் ஒழுக்கம், நற்பண்புகள், இலட்சிய வேட்கை என்பவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள இராணுவத்தளபதி எதிரிகளைவிட கூடுதலான உள்ளுணர்வும், புலிகளை வெல்ல வேண்டும் என்ற இலட்சியமும் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது போருக்கு ஆயுத தளபாட வசதிகள் என்பன எவ்வளவு இருப்பினும், இலட்சியப்பற்றும், மன உறுதியும், ஒழுக்கமும் முக்கியம் என்பதும், போரின் வெற்றிக்கு அவை அவசியம் எனவும் இராணுவத் தளபதி வற்புறுத்தியுள்ளதோடு, விடுதலைப் புலிகளிடம் அவை நிறைந்திருப்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், விடுதலைப் புலிகளிடம் உள்ள ஒழுக்கம், கட்டுப்பாடு, இலட்சியப்பற்று என்பனவற்றை இராணுவத்தினரிடம் இராணுவ தளபதி எதிர்பார்க்க முடியாததொன்றாகும். அவ்வாறு ஒழுக்கம், கட்டுப்பாடு ஒன்றை இராணுவத்தினரிடம் பேண முடியுமானால், விடுதலைப் போராளிகளுக்கும், ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கும் இடையில் வித்தியாசம் குறைந்து விடும்; சில வேளை, இல்லாமலே போய் விடக் கூடும்.

ஒரு நாட்டு இராணுவம் எப்பொழுது ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறுகின்றதோ அன்றலிருந்து அதன் ஒழுங்கு கட்டுக்கோப்புக்கள் என்பன சீரழிந்து போகின்றன. தனது நாட்டில் இருக்கும்வரை தமது மண்ணைப் பாதுகாக்கும்வரை, பாதுகாப்புப் படையாக இருக்கும் ஆயுதப் படையினர் ...

# இராணுவ அமைப்பில் கட்டுப்பாடு குலைவு

# புலிகளுக்குப் பயந்து படையிலிருந்து ஓட்டம்

மார்ச் 18 ஆம் திகதி பூநகரியில் தன்றுமாத்தளை மாவட்டத்திலுள்ள களுகாவெலவிலுள்ள தமது இலக்கில் வைத்துஆயுதபாணியான பொலிசாரால் விஜயபாகு காலாட்படைப் பிரிவின் ஐந்தாவது பட்டாரியனைச் (5 VIR)சேர்ந்த இளம் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார். அந்த வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் 9 எம். எம். தன்னியக்க பிஸ்டல் ஒன்றை கண்டெடுத்தனர். இச்சம்பவத்தில் மற்றொரு கிரிமினல் குற்றவாளியும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

ஆயுதம் தரித்தபல கொள்ளைச்சம்பவங்களோடு தொடர்புடைய கிரிமினல் ஒருவரின் உதவியோடு இந்தப் பிஸ்டல் விற்பனை செய்யப்படவிருந்த வேளையிலேயேமேற்படி இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டதாகமத்தளை பொலிஸ் பிரிவில் குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரியாக இருக்கும் யூ டபிள்யூ உமாஜில்யா கூறுகின்றார்.

களுதாவெல சம்பவம் ஒரு தனிப்பட்ட உதிரிச் சம்பவமல்ல ஆயிரக்கணக்கில் இல்லாவிடினும் நூற்றுக்கணக்கில் இராணுவ மற்றும் பொலிஸ் சேவைகளிலிருந்து விலகியுள்ளவர்களில் பலரும் கிரிமினல் குற்றங்களில ஈடுபட்டுவருகின்றனர் என்பதற்குகளுதாவெல சம்பவம் ஒரு உதாரணம் மட்டுமே கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் இராணுவ மற்றும் பொலிஸ் சேவைகளிலிருந்து பலரும் விலகியோடியிருப்பது நம்பகமாகத் தெரிய வருகின்றது.

இதுபெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக உருவெடுத்திருப்பதாக பாதுகாப்பு படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பொலிஸ் திணைக்களத்தின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து கைது செய்யப்பட்ட இந்த இராணுவச் சிப்பாய் கிழக்கு மாகாணத்தின் செங்கலடிப் பகுதியில்பணியில் ஈடுபடுத்தப்பட்டவர் என்பதும் தெரியவந்தது. அவரதுபடைப் பிரிவான(5VIR) கிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட பின்னர் இந்த 9 எம். எம். பிஸ்டல் புலிகளினுடைய து என்று ...

இராணுவப் பொலிசாரும் நெருங்கிப் பணிபுரிவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசாங்கமும், பாதுகாப்பு படையின் உயர் மட்டத்தினரும் இராணுவத்திலும், பொலிசிலும் இருந்து இவ்வாறு பலர் விலகியோடியிருப்பதற்கான காரணங்களை ஆராய வேண்டிய தருணம் வந்துவிட்டது.

### காலாட்படையின் முன்னணிப் பிரிவினர்

சண்டே ஐலண்ட் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில போர்முனையில் ஈடுபடுத்தப்பட்ட காலாட் படையின் முன்னணிப் பிரிவு இராணுவத்தினரே பெருமளவில் தப்பியோடியுள்ளமை தெரியவருகிறது எனவே, பெருமளவில் படையினரின் உயிரிழப்பு என்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் இவ்வாறு தப்பியோடுபவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை இன்னுமொரு காரணமாக இருக்கலாம்.

கொள்கைகள் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு திட்டம் வகுக்கும் மூளைசாலிகளாக மாறக்கூடும்.

கொள்ளைகள் முதல் ஆட்கடத்தல் ஈறான பல்வேறு குற்றச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களாக பாதுகாப்பு படையின் உறுப்பினர்கள் சிலரே சம்பந்தப்பட்டிருப்பது அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் தீவு முழுவதும் ரத்தம் பாயும் கிரிமினல் சம்பவங்கள் நடைபெறுவதை தவிர்க்க முடியாமல் போகும் என்பதுடன் அச்சமும் ஆபத்தும் நிறைந்த பாதுகாப்பு நிலைமை உருவாக்கப்பட்டுவிடலாம்.

பல்வேறு இராணுவக் கல்லூரிகளிலும் அவர்கள் பெற்ற ஆயுதங்களைக் கையாளும் பயிற்சியும், போர்முனைகளில் அவர்கள் பெற்ற அனுபவமும் சேர்ந்து அவர்களை ஆபத்தானவர்களாக்கி விடும்.

நிலைமைமிகவும்சீர்கேடு அடைந்துள்ளமையானது இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவை இராணுவ விசாரணைக் குழு அமைப்பதற்கு நிர்ப்பந்தித்துள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாடுசீர்கேடு அடைந்திருப்பதாகவும் ஆயிரக்கணக்கானோர் தப்பியோடியிருப்பதாகவும் சண்டே ஐலண்ட் இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டே ஐலண்ட் பத்திரிகையில் வெளியான மேற்படி ஆய்வுக் கட்டுரையின் மொழியாக்கம் எமது வாசகர்களுக்காக இங்கே தரப்படுகிறது.

ஆனால் இப்போது தப்பியோடியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இராணுவத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து வடக்கு கிழக்கில் அரசின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்பது தொடரும் இப்போக்கின் தொடர்ச்சியாக பலத்த பின்னடைவுகளுக்கு உள்ளாகக் கூடும் எனப்பலர் நம்புகின்றனர்.

"ஒரு தடவைவிடுமுறையில் வருபவர்கள் மீண்டும் போர்க்களத்திற்குச் செல்ல விருப்பவில்லை" என்பதுவே உண்மையென தனது மாகாணத்தில் பல இராணுவத் ...

### குற்றச் செயல்களின் அதிகரிப்பு

அண்மைய சில ஆண்டுகளாக நாட்டில் குற்றச் செயல்கள் பெருகி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கொலை, பாலியல் வன்முறை, கடத்தல், ஸ்தம்பிக்க வைத்தல், கலவரங்கள், கொள்ளை என்பன நாளாந்தம் செய்திப் பத்திரிகைகளில் இடம் பிடிப்பதை அண்மைக்காலமாக அவதானிக்கலாம் இராணுவத்திலும். பொலிசிலும் இருந்து விலகியவர்களே இத்தகைய செயல்களின் சூத்திரதாரிகளாக இருக்கலாம் என்று பலரும் நம்புகின்றனர் மேலும் வடக்கு, கிழக்கிற்கு வெளியே தன்னியக்க மற்றும் ...

ரணைகளுக்கு உத்தர விட வேண்டிவந்துள்ளது. இந்த மூன்று பிரிகேடியர்களும் இராணுவ அதிகாரிகளிடையே தவறான நடத்தை ஊழல் போன்றவற்றை விசாரிக்கவுள்ளனர். பிரிகேடியர்கள் உபாலிகருணாரத்தினா, பற்றிக் பெர்னான்டோ, சிறிலால் வீரசூரிய ஆகியோர் தமது முதற்கட்ட விசாரணைகளை முடித்து ஏற்கனவே அறிக்கைகள் கையளித்துள்ளனர்.

அதிகாரிகள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைக் கண்டுபிடிக்கவும், சட்டவிரோத நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்களைப் பிடிக்கவும் வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளனர். அண்மைக்காலத்தில் குறிப்பிடக்கூடிய அளவில் இராணுவத்திலும், பாதுகாப்பு படைகளிலும் பொலிசிலும் கட்டுப்பாடும், ஒழுங்கும் சீர்குலைந்து போயுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும், ஜே. வி. பி. யினருக்கும் எதிராகப் போரிட பெரும் எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டதே இத்தகைய ஒழுங்கு, மற்றும் கட்டுப்பாடு குறைவடைந்தமைக்கு காரணம் என சிலர் சொல்லுகின்றனர். எல்லோரையும் பரீட்சித்துப் பார்க்க அவகாசம் இருக்கவில்லை. எதற்கும் கால அவகாசம் என்பது இருக்கவில்லை.

புதியவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட சில மணிநேரத்திலேயே இராணுவக் கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டனர். இத்தகையவர்களில் கணிசமான தொகையினர் 1987 இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகியதும் இராணுவத்திலிருந்து விலகி ஜே. வி. பி. யில் போய் சேர்ந்து கொண்டனர்.

இவர்கள் பாதுகாப்பு படைமுகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் மீதான தாக்குதல்களில் பங்கேற்று நடத்தியதாகப் புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன. இராணுவ மற்றும் பொலிஸ் சேவைகளிலிருந்து தப்பியோடியவர்கள் அரசுக்கு எதிரான வன்முறைக் கிளர்ச்சிகளில் முக்கிய பங்காற்றியிருப்பதும் புலனாய்வுகளிலிருந்து தெரியவருகின்றது கிளர்ச்சியோடு தொடர்புடைய கொலைகளுக்கு இந்த நபர்களே பொறுப்பு எனவும் ...

ஒழுங்குகளையும் பேணாத போது சாதாரண குடிமக்களின் மட்டத்தில் சட்டமும், ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படுமென எவரும் எதிர்பார்க்கமுடியாது தான். எனவே அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவையாக கருதப்படவேண்டும். ஜே. வி.பி யினரின் கிளர்ச்சிகள் மலிந்திருந்த காலத்தில் நடத்தப்பட்ட மிகவும்ஜாக்கிரதையான கொலைகளை சில அதிகாரிகளின் திட்டமிடல் இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டு இலேசானதல்ல

காலம் போய்க்கொண்டிருக்கின்றது. கிரிமினல் நடவடிக்கைகளிலும்மனித உரிமைமீறல் சம்பவங்களோடும் தொடர்புடைய அனைவர் மீதும் உடனடியாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. இவற்றின் அடிப்படையில் விளைவுகளைக் கூட்டும் தந்திரோபாயங்களை கைக்கொள்ள அதிகாரிகள் பணிக்கப்பட வேண்டுமென்பதும், படையினருக்கு இடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பேண வேண்டியதும் வடக்கு கிழக்கு யுத்தத்தை வெல்வதற்கு முதலில் வேண்டப்படுவதாகும்.

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸ் மத்தியில் ஒழுங்கும் கட்டுப்பாட்டுணர்வும் குன்றி வருவதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய அரசாங்கமும் உடனடியாகப் புலனாய்வு நடவடிக்கைகளை தொடங்கவேண்டும். விலகியோடுவதும் கட்டுப்பாட்டுக் குறைவும் தொடர்ந்து முழுத் தேசத்தின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த நிலைமை சீராக்கப்படவேண்டும்.

இதில் தோல்வி கண்டால் நாட்டின் சட்டமும், ஒழுங்கும் பேணப்படுவதில் பாரிய தாக்கம் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது. அதேவேளை மிதந்த எதிர்ப்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இராணுவத்தினரின் வடபகுதித் தாக்குதல்களும் இதனால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகும். புலிகள் வடபகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும் ...

அதாவது போருக்கு ஆயுத தளபாட வசதிகள் என்பன எவ்வளவு இருப்பினும், இலட்சியப்பற்றும், மன உறுதியும், ஒழுக்கமும் முக்கியம் என்பதும், போரின் வெற்றிக்கு அவை அவசியம் எனவும் இராணுவத் தளபதி வற்புறுத்தியுள்ளதோடு, விடுதலைப் புலிகளிடம் அவை நிறைந்திருப்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால், விடுதலைப் புலிகளிடம் உள்ள ஒழுக்கம், கட்டுப்பாடு, இலட்சியப்பற்று என்பனவற்றை இராணுவத்தினரிடம் இராணுவ தளபதி எதிர்பார்க்க முடியாததொன்றாகும். அவ்வாறு ஒழுக்கம், கட்டுப்பாடு ஒன்றை இராணுவத்தினரிடம் பேண முடியுமானால், விடுதலைப் போராளிகளுக்கும், ஆக்கிரமிப்பு இராணுவத்தினருக்கும் இடையில் வித்தியாசம் குறைந்து விடும்; சில வேளை, இல்லாமலே போய் விடக் கூடும்.

ஒரு நாட்டு இராணுவம் எப்பொழுது ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறுகின்றதோ அன்றலிருந்து அதன் ஒழுங்கு கட்டுக்கோப்புக்கள் என்பன சீரழிந்து போகின்றன. தனது நாட்டில் இருக்கும்வரை தமது மண்ணைப் பாதுகாக்கும்வரை, பாதுகாப்புப் படையாக இருக்கும் ஆயுதப் படையினர் அடுத்த நாட்டின் அல்லது அடுத்தவரின் மண்ணில் கால் வைக்கும்போது ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறுகின்றது. அவ்வாறு ஆக்கிரமிப்பு இராணுவமாக மாறும்போது இராணுவத்தின் பண்புகளும் மாற்றமடைகின்றன. அவற்றின் கட்டுக்கோப்பு, ஒழுக்கம் என்பனவும் சீர்கெடுகின்றன. அத்தோடு, உள்நாட்டிலும் அதிகாரம் இராணுவத்தின் கையில் இருக்குமானாலும் ஒழுக்கம், கட்டுக்கோப்பு இல்லாமல் போகின்றது.

தனது மண்ணைப் பாதுகாப்பதற்காகப் போராடும் போது இராணுவத்தைச் சேர்ந்தவனாகிலும் தனது இறப்பில் ஓர் அர்த்தம் இருப்பதாக உணர்கின்றான். ஆனால், ஆக்கிரமிப்புப் போரில் இறக்கும்போது அவனுக்கு ஆத்மதிருப்தி கூட ஏற்பட வாய்ப்பு ஏற்படுவதில்லை. அத்தோடு ஆக்கிரமிப்புப் போரில் உயிர் வாழ முடியும் என்பதும் நிச்சயமற்றதாகின்றது. இந் நிலையில், கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ளுதல், அனுபவித்தல் என்பனவற்றில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர். இதனால், இராணுவத்தின் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன சீர்குலைகின்றன. இதுவே உலக வரலாறு தந்த பாடமாகும்.

இதை சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். உலகில் ஆக்கிரமிப்பு இராணுவமாகச் செயற்பட்ட உலக வல்லரசுகளின் இராணுவங்கள் கூட ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஒழுக்கம் கட்டுப்பாட்டை இழந்ததைக் கவனத்தில் கொள்ளுதல் நல்லது.

இத்தோடு, சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடம் தாம் எப்படிப்பட்டவர்களுடன் போராடுகின்றோம், அவர்களுடனான கடந்த காலப் போரில் தமக்கு ஏற்பட்ட அனுபவம், இந்திய இராணுவத்தின் புலிகளுடன் மோதிக் கொண்ட வரலாறு, இந்திய இராணுவத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புலிகளின் இலட்சிய உறுதி, போரிடும் திறன் என்பன இன்று எதிரிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்திய இராணுவத்திற்கு தளபதியாக இருந்த ஜெனரல் ஹர்கிரட் சிங் 'புலிகளுக்கு குளிருக்குப் போர்வையோ, உணவோ எதுவும் தேவையில்லை எந்நெருக்கடியிலும் ஈழம் என்ற இலட்சியத்தில் இருந்து அவர்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை' எனத் தெரிவித்தார். இந்நிலையில், ஆக்கிரமிப்பு இராணுவம் ஒன்றை, இலட்சிய வேட்கையோடு உள்ளுணர்வாகப் போராடும் விடுதலைப் போராளிகளிடம் காணப்படும் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றைக் கடைப்பிடிக்குமாறு கோருவதனால் எந்த விதப் பயனும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

வருகின்றது.

இது பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலாக உருவெடுத்திருப்பதாக பாதுகாப்பு படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பொலிஸ் திணைக்களத்தின் ஆரம்ப விசாரணைகளிலிருந்து கைது செய்யப்பட்ட இந்த இராணுவச் சிப்பாய் கிழக்கு மாகாணத்தின் செங்கலடிப் பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டவர் என்பதும் தெரியவந்தது. அவரது படைப் பிரிவான (5VIR) கிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட பின்னர் இந்த 9 எம். எம். பிஸ்டல் புலிகளினுடையது என்று அவர் கூறுகின்றார். தொப்பிகல காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் முகாமில் தேடுதல் நடத்திய போது தானும் மற்றுமொரு சிப்பாயும் இப் பிஸ்டலைக் கண்டெடுத்ததாக அவர் தெரிவிக்கின்றார். ஆனால் இதனை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்காமல் தாம் மறைத்து வைத்திருந்தது ரூபா 10 000 ற்கு விற்பனை செய்வதற்கே எனவும் அச்சமயத்தில் பொலிசாரிடம் அகப்பட்டதாகவும் பொலிஸ்அதிகாரிகளுக்கு கூறியுள்ளார்

பொலிஸ் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியின் கூற்றுப்படி களுதாவெல கைது மாத்தளைப் பகுதியில் தனித்த ஓர் உதிரிச் சம்பவம் அல்ல கடந்த மூன்று மாதகாலத்தில் மாத்தறை பொலிஸ் பிரிவில் மட்டும் இத்தகைய இருபது கைதுகள் இடம்பெற்றுள்ளன. சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரின்டன் பகிந்தபால சூரியவின் பணிப்பின்பேரில் உம ஜில்யா இராணுவத்திலிருந்து விலகிய இத்தஇருபது பேரையும் கைது செய்துள்ளார்.

இராணுவ பிரிகேடியர் ஒருவரிடம் இது பற்றி கேட்ட போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய நாலாயிரம் பேரைப் பிடிப்பதற்கு இராணுவம் பொலிசாரின் உதவியைக் கோரியிருப்பதாகவும், தெரிவித்தார் அவரது தகவலின் படி கடந்த மூன்று அல்லது நான்கு வருடங்களில் 3000-4000 வரையிலான இராணுவத்தினர் தமது பிரிவுகளிலிருந்து விலகியோடியிருப்பதாகத் தெரியவருகின்றது.

மேலும் 77,000 பேரைக் கொண்ட இராணுவத்தில் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாதோரைக் கண்டு பிடிக்குமாறு இராணுவப் பொலிஸ் பணிக்கப்பட்டுள்ளது. தலைமறைவாகியுள்ள இராணுவத்தினரை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் பொலிசாரும்

ஆனால் இப்போது தப்பியோடியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இராணுவத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து வடக்கு கிழக்கில் அரசின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்பது தொடரும் இப்போக்கின் தொடர்ச்சியாக பலத்த பின்னடைவுகளுக்கு உள்ளாகக் கூடும் எனப்பலர் நம்புகின்றனர்.

'ஒரு தடவைவிடுமுறையில் வருபவர்கள் மீண்டும் போர்க்களத்திற்குச் செல்ல விரும்பவில்லை'' என்பதுவே உண்மையென தனது மாகாணத்தில் பல இராணுவத்தினரைத் தேடிக்கொண்டிருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகின்றார்.

'இந்த நிலைமை மிக மோசமானது' என அவர் மேலும் விளக்குகிறார். மாத்தளையில் அண்மையில் கைதான இராணுவத்தினர் ஒருவர் ரி-56 சீனத் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றையும், 36 எம். எம். கிரனைட் ஒன்றையும் இழக்கிலிருந்து மாத்தளைக்கு கடத்தியுள்ளார் எனத் தெரிகின்றது. ஆனால் பொலிசாரின் தேடுதலின்போது 9 எம். எம். தன்னியக்க பிஸ்டல் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பி வந்த பல இளைஞர்கள் கிரிமினல் குற்றங்களோடு தொடர்புடையவர்களாக இருக்கின்றனர் எனப் பொலிசார் நம்புகின்றனர் அவர்கள் றைபிள்கள், கிரனேட்டுகள், ரவைகள், வெடிபொருள்கள் உட்பட ஆயுத தளபாடங்கள் மற்றும் திருட்டுப் பொருட்கள் பலவற்றையும் விற்பதற்கு முயற்சி எடுத்துள்ளமை புலனாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இராணுவத்திலிருந்து விலகுவோரின் எண்ணிக்கை மெதுவாக ஆனால் ஆபத்தானதாக உயர்ந்து வருகின்றது. "காலப்போக்கில் இவ்வாறு விலகியவர்களே பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறுவார்கள்'' எனப் பாதுகாப்பு படையின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான நபர்கள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபடத் தொடங்கினால் பாதுகாப்பு நிலைமை மிகுந்த ஆபத்தானதாக இருக்கும் என்று பொலிஸ் அதிகாரிகள் நம்புகின்றனர். அவர்களது போர்முனை அனுபவங்கள், ஒழுங்குபடுத்தும் திறமைகள் என்பவற்றை இணைத்துப்பார்த்தால் இத்தகையவர்கள் புதிய பாணியிலான

## குற்றச் செயல்களின் அதிகரிப்பு

அண்மைய சில ஆண்டுகளாக நாட்டில் குற்றச் செயல்கள் பெருகி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கொலை, பாலியல் வன்முறை, கடத்தல், ஸ்தம்பிக்க வைத்தல், கலவரங்கள், கொள்ளை என்பன நாளாந்தம் செய்திப் பத்திரிகைகளில் இடம் பிடிப்பதை அண்மைக்காலமாக அவதானிக்கலாம் இராணுவத்திலும். பொலிசிலும் இருந்து விலகியவர்களே இத்தகைய செயல்களின் சூத்திரதாரிகளாக இருக்கலாம் என்று பலரும் நம்புகின்றனர் மேலும் வடக்கு, கிழக்கிற்கு வெளியே தன்னியக்க மற்றும் நவீனரகத் துப்பாக்கிகள் ஏனைய இராணுவ சாதனங்கள் பாவித்து நடைபெறும் குற்றச் சம்பவங்கள் என்பன ஊன்றிக் கவனிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இராணுவ மற்றும் பொலிசிலிருந்து விலகியவர்கள் போதை மருந்து வியாபாரத்திலும் இலகுவாக ஈடுபடக்கூடும். இதுவரையில் இதற்கான தெளிவான சாட்சியங்கள் இல்லாதபோதும் இந்தச் சாத்தியப்பாட்டையும் நிராகரிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் தான் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ண மூன்று பிரிகேடியர்களை கொண்ட விசா

1987 இல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகியதும் இராணுவத்திலிருந்து விலகி ஜே. வி. பி. யில் போய் சேர்ந்து கொண்டனர்.

இவர்கள் பாதுகாப்பு படை முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் மீதான தாக்குதல்களில் பங்கேற்று நடத்தியதாகப் புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன. இராணுவ மற்றும் பொலிஸ் சேவைகளிலிருந்து தப்பியோடியவர்கள் அரசுக்கு எதிரான வன்முறைக் கிளர்ச்சிகளில் முக்கிய பங்காற்றியிருப்பதும் புலனாய்வுகளிலிருந்து தெரியவருகின்றது கிளர்ச்சியோடு தொடர்புடைய கொலைகளுக்கு இந்த நபர்களே பொறுப்பு எனவும் நம்பப்படுகிறது, ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல் வாதிகளும், ஆதரவாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டமை தெரிந்ததே. இவர்கள் கொழும்பிலும் பிற மாகாணங்களிலும் அரசியல் எதிரிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை அல்லது காயப்படுத்தப்பட்டமைகளோடு தொடர்பு கொண்டுள்ளனர்.

இத்தகையவர்களில் பலர் இன்றுவரை கைதுசெய்யப்படவில்லை. அதிகாரிகளின் பிடியிலிருந்து வெகு லாவகமாக இவர்கள் தப்பித்து வருகின்றனர்.

அதிகாரிகள் மட்டத்தில் இருப்போர் சட்டத்தையும்,

பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த நிலைமை சீராக்கப்படவேண்டும்.

இதில் தோல்வி கண்டால் நாட்டின் சட்டமும், ஒழுங்கும் பேணப்படுவதில் பாரிய தாக்கம் ஏற்படுவதை தவிர்க்கமுடியாது. அதேவேளை மிகுந்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இராணுவத்தினரின் வடபகுதித் தாக்குதல்களும் இதனால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகும். புலிகள் வடபகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே.

இந்தப்போர் வெல்லப்பட வேண்டும். அரசியல் மற்றும் இராணுவத் தலைமைத்துவங்களின் தவறான கணிப்பீடுகளால் நேரும் துக்ககரமான இழப்புக்கள் தவிர்க்கப்படல் வேண்டும், படையினர். மத்தியில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டுக் குலைவினால் ஏற்படும் அச்சுறுத்தல்களை அரசாங்கம் இனங்கண்டு கொள்ள வேண்டும். மேலும் காலந்தாழ்த்தப்பட்டு நிலைமை மோசமடைவதற்கு முன்பாக திருத்தப்பட வேண்டும்.

### முன்னாள் சோவியத்தின் ஆறு அணுகுண்டுகள்

# ஈரானுக்கு விற்கப்பட்டதாக அமெரிக்கா சந்தேகம்

முன்னாள் சோவியத் யூனியனின் ஆயுதக் கிடங்கிலிருந்து ஆறு அணுகுண்டுகள் காணாமற் போயிருப்பதாக ''நியூஸ் அன்வேல்ர்ட்ரிப்போட்'' சஞ்சிகை கூறியுள்ளது

உக்ரைனில் ரஷ்ய ஜெனரல் விக்டர் சமோய்லோவ் வாஷிங்டன் சர்வதேச பாதுகாப்புச் சபை அங்கத்தினர்களிடம் இத்தகவலை தெரிவித்ததாக மேற் கண்ட சஞ்சிகை தெரிவித்தது.

கேந்திரஏவாயுதங்களில் பொருத்துவதற்கான முறையில் இந்த அணுகுண்டுகள் வடிவமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது

அணு ஆயுதங்களைப் பாதுகாக்க ரஷ்யா இயன்ற அனைத்தையும் செய்து வருவதாகவும் ஆனால் அங்கீகாரம் பெறாத பலர் சேமிப்பு பகுதிக்கு வருகின்றார்கள் என்றும் குறிப்பாக ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் வெளியே உள்ளவர்கள் அங்கு காணப்படுகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கசாகிஸ்தானிலிருந்து மூன்று கேந்திர அணு ஆயுதங்கள் காணாமற் போயிருப்பதாகவும் அவை ஈரானுக்கு விற்கப்பட்டிருக்கலாம் என்றும் அமெரிக்க உளவு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் மேற்கண்ட சஞ்சிகை கூறியுள்ளது.

# அரசியல் தலைவர்களின் காவல் உத்தரவு ரத்து

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் ஐந்து முக்கிய அரசியல் தலைவர்களின் காவல் உத்தரவுகளை மாநில நிர்வாகம் ரத்துச் செய்துள்ளது. மாநிலத்தில் அரசியல் வழிமுறைகளை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சியே இதுவென பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ஜம்மு காஷ்மீர் மாநில சட்டப்பேரவையில் முன்னாள் உறுப்பினர்களான அப்துல்கனி லோகி. சையர் அலிகாளியியானி பேராசிரியர் அப்துல்கானி, மாலிவி அப்துல் அபாஸ் அன்சளி சாவிநினர் அகமட் ஆகிய ஐந்து பேரையும் காவலிலிருந்து விடுவிக்கும் உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த க. தபோஜன் என்பவரின் அடையாள அட்டையும், மணிப்பேர்ஸும், சுண்டுக்குளிக்கும் பரமேஸ்வராச் சந்திக்கு மிடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள், ந்ரசன், மதுபானச்சாலை டலலிறோட் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (2350)


உயர் கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி

பேராதனை பல்கலைக் கழக G. A. Q 92 / 93 மாணவர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வந்துள்ளன. பதிவதற்கான இறுதித் திகதி:- 05. 04. 92

(சி/4116) பதிவாளர்


## புத்தளத்தில் பெரும் வரட்சி

(மன்னார்)

புத்தளம் பகுதியில் வரட்சி காரணமாக குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

முந்தல், செல்லங்கண்டல், தில்லையடி, பாலாவி மக்கள் குடிப்பதற்கு நீர் பெறவும் குளிக்கவும் பல மைல்கள் தூரம் சென்றே தண்ணீரைப் பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு தொகுதி அகதிகள் வவுனியா வந்தனர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலை வந்த அகதிகளில்மேலும்ஒருதொகுதியினர் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா வந்துசேர்ந்தனர்.

வவுனியா ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள முகாம்களில் தற்காலிகமாக தங்க விடப்பட்டுள்ள இவர்களை தாண்டிக்குள அகதிகள் பராமரிப்பு நிலையத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன

இதேவேளை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் வசிப்பவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் உள்ளவர்கள் தமது சொந்த இடங்களுக்கு போக விரும்பினால் தமது விருப்பத்தை எழுத்து மூலம் அரசாங்க அதிபருக்கு தெரிவித்து போகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அழ. கல்வி ஆசிரியர்களுக்கு ஆலோசகர் நியமனம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். கோட்டக் கல்விப் பகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அழகியற் கல்வி (நடனம், ஓவியம், சங்கீதம்) ஆசிரியர்களுக்கு இன்று வரையும் ஆசிரியர் ஆலோசகர் நியமனம் வழங்கப்படாதுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு வருடங்களுக்கு முன் பிரஸ்தாப அழகியற் கல்வி, ஆசிரியர்களுக்கு ஆசிரிய ஆலோசகர் பயிற்சிக் கருத்தரங்கு நடாத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன. வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு இந்த ஆசிரியர்களை ஆசிரிய ஆலோசகர்களாகத் தெரிவு செய்திருந்தது.

இப் பதவிக்கான நியமனக் கடிதங்கள் இருவருடங்களுக்கு மேலாக வழங்கப்படாது தாமதம் செய்யப்பட்டுவருவதால் யாழ். கல்வித்திணைக்களம் இவ் வாசிரியர்களுக்குரிய விசேட கொடுப்பனவுகளை வழங்க மறுத்து வருகின்றது என்று பிரஸ்தாப ஆசிரியர்கள் மேலிடத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர். (24)

## நாய் கடிக்கு இலக்கானவர் திடீரென மரணம்

(வவுனியா)

நாய் கடிக்குச் சிகிச்சை பெற்றுச் சுகமடைந்திருந்தவர் சிலமாதங்களின்பின் திடீரென மரணமானார்.

வவுனியா பருசன்குளம்பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி புவனேஸ்வரன் (வயது 20) என்பவரே இவ்வாறு திடீரென மரணமடைந்தவராவார்.

நாய் கடித்ததையடுத்து இவர் மல்லாவியிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று சில மாதங்களாகச் சுகமடைந்திருந்தார்.

பின்னர் திடீரென ஏற்பட்ட வலிப்பினால் மரணமடைந்துள்ளார். (தி)


COMMERCIAL BANK

வளமான சேமிப்பிற்கு
வடக்கில் ஓர் புதிய பாதை
உங்கள் வங்கி வழங்கும்

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ்கள்
COMBANK SAVINGS CERTIFICATES

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ் உறுதிசெய்வது:

- ★ வைப்பிலிடும் போதே வளமான வட்டி
- ★ கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
- ★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (NO WITHHOLDING TAX)
- ★ முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
- ★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
- ★ நியமிக்கும் மறு உரித்தாளரிற்கு பணம்

மக்கள் சேவையில் முதன்மையான உங்கள் வங்கி
வெகு விரைவில் வழங்கும்

புத்தாண்டுப் பரிசுத் திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூபா 500/- ரூபா 1000/- ரூபா 5000/- ரூபா 10000/. ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை-:



பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)

A/L 92 புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | யோகராஜா, சௌந்தி |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| புவியியல் | — | ஜோசப் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |


## 45-ம் நாள் நினைவலைகள்



17-02-1992 அன்று வளலாய்ப் பகுதியில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவடைந்த

**லெப்டினன் சுரேஸ் / தில்லை**

(அருளானந்தசாமி ஜெயசீலன்)

வீரப்பிறப்பு 28 - 0[illegible] - 197[illegible]
வீரச்சாவு [illegible]7 - 0[illegible] - 1992

இன்பம் தேடும் இளைவயதில் - இந் நாட்டின்
துன்பம் கண்டு பொங்கி நின்றாய் -
''இன்பருட்டி'' ஈன்றெடுத்த ''சுரேசே''
வீரச்சாவை ஏற்று நீ விதையானாய் - களத்தினிலே
முளைக்கும் புது அரும்புகளும் உன் சுவட்டை
சளைக்காது தொடருகையில் மலரும் ஈழத்தில்
களைக்காது தேடுவோம் உன் முகத்தை ஓர்முறை
பிறப்பாயா?
நீலக்கடல் அலைகூட ஓடிவந்து கரையினிலே
நீயில்லாச் சேதிகேட்டு சோகத்துடன் திரும்புதையா!

01 - 04 - 1992 இன்றுஇவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் போராளிகள், உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இன்பருட்டி,
பருத்தித்துறை.

- குடும்பத்தவர்கள்

(சி4099)

## நினைவு கூருகின்றோம்...

### 1992. 04. 01

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை, பொத்துவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

★ ரமேஷ் (இராதாகிருஷ்ணன் - நாவலப்பிட்டி.)

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது வீரச்சாவெய்திய -

★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (NO WITHHOLDING TAX)
★ முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
★ நியமிக்கும் மறு உரித்தாளரிற்கு பணம்

மக்கள் சேவையில் முதன்மையான உங்கள் வங்கி
வெகு விரைவில் வழங்கும்

## புத்தாண்டுப் பரிசுத் திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூபா 500/- ரூபா 1000/- ரூபா 5000/- ரூபா 10000/. ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை-:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14.5%ல் | 15. 5%ல் | 16.5%ல் | |
| ரூபா 465/- | 433/- | 375/- | ரூ. 500/- |
| ரூபா 932/- | 866/- | 750/- | ரூ. 1000/- |
| ரூபா 4662/- | 4330/- | 3760/- | ரூ. 5000/- |
| ரூபா 9325/- | 8659/- | 7519/- | ரூ 10,000/- |

எம்மை நாடுங்கள், சேமியுங்கள், வளருங்கள்!

# வர்த்தக வங்கி

## 474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் வெற்றி எங்கள் பலம்

தலைமையலுவலகம்:

## "கமார்ஷியல் இல்லம்"

21 பிறிஸ்டல் வீதி,
கொழும்பு - 1.

எமது ஏனைய கிளைகள்:

வெளிநாட்டுக்கிளை (கொழும்பு), நகரக்கிளை (கோட்டை), புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, பொரளை, நுகேகொடை, மகரகம, கட்டுநாயக்கா (F T Z), நீர்கொழும்பு, வென்னப்புவ, கண்டி, மாத்தளை, கேகாலை, கலேவெல, குருநாகல், ஹிங்குராக்கொடை, ஹிக்கடுவ, காலி, மாத்தறை. (சி-4114)



# A/L 92 புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | யோகராஜா<br>சௌந்தி |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| புவியியல் | — | ஜோசப் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |


ஆரம்பம்: 02- 04- 1992
காலை: 8. 00 மணி

கணக்கியல்
சௌந்தி
கம்பனி க/கு
ஆரம்பம்: 02. 04. 1992
வியாழன் : 8. 00 A. M

(4122)


# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம் 04 — 10 — 1970



வீரச்சாவு 01 — 04 — 1991

## வீரவேங்கை அமலன்
## (மகாதேவன் - சுரேஷ்குமார்)

மண்ணின் விடிவுக்கு
உரமான எம்
கண்ணின் மணியே
காலமெல்லாம் உன் நினைவு
வண்ணமுற வாழும்
எண்ணமது ஈடேறுமென
ஆண்டொன்று ஆகும் நாளில்
அரவணைத்தோம் உன்னவரை!

இங்ஙனம்
குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

மட்டக்களப்பு தொடர்பகம். (சி 4068)

# நினைவு கூருகின்றோம்...

## 1992. 04. 01

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை, பொத்துவில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ரமேஷ்** (இராதாகிருஷ்ணன் - நாவலப்பிட்டி.)

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவெய்திய -

**ஸ்ராலின்** (கிருஸ்ணபிள்ளை சிறிஸ்கந்தநாதன் - வடலிவளவு, புலோலிதெற்கு.)

1987 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். மயூரன் / பவி** (இராசரத்தினம் செல்வக்குமார் - மல்லாகம்.)

1991 ஆம் ஆண்டு இலுப்பையடிச்சேனையில் கரடியனாறு முகாம் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**குகநாதன்** (இ. ரணசிங்கம் -காரைதீவு, அம்பாறை.)

**அமலன்** (மகாதேவன் ராஜேஸ் - குருக்கள் மடம் மட்டக்களப்பு.)

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். அஜித்** (இரட்ணசிங்கம் ரகுபரன் - உப்போடை, கல்லடி, மட்டக்களப்பு.)

காரைநகரில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பொஸ்கோ** (கணபதி சிறிரஞ்சன் - துன்னாலை தெற்கு, கரவெட்டி.)

**சேது** (வீரசிங்கம் கிருபாகரன் - அராலி வட்டுக்கோட்டை.)

**லெப். நிதி** (விவேகானந்தன் நிதிவண்ணன் - சித்தன்கேணி.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வேப்பவெட்டுவான் வாசிகளான மூவர் உட்பட 4 தமிழ் விவசாயிகள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ரமேஷ் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## விடுதலைப் புலிகள்
## மக்கள் முன்னணி

(சி-4121)

ஈழநாதம்

# சுதந்திரப் போராட்டத்தில் குதிப்பதாக சீக்கிய அரசியற்கட்சிகள் பிரகடனம்

(டில்லி)

காலிஸ்தான் என்னும் சுதந்திர நாடு கோரும் சீக்கியரின் சுதந்திரப்போர் சீக்கியரின் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவிலிருந்து பஞ்சாப் மாகாணத்தைப் பிரித்துக் காலிஸ்தான் என்னும் தனி நாடு கோரும் சீக்கியப் போராட்டத்தைத் தாம் ஆதரித்துச் சுதந்திரப்போராட்டத்தில் குதிக்கப்போவதாகப் பஞ்சாப்பின் ஆறு அரசியல் கட்சிகள் அறிவித்துள்ளன

முன்னதாகப் பஞ்சாப் தேர்தலைப் புறக்கணித்த இக் கட்சிகள் போராளிகள் சார்பான முடிவை எடுத்திருப்பது பஞ்சாப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியதாகத்தெரிகிறது.

மேலும் காலிஸ்தான் சுதந்திரப் போர் சீக்கியரின் புத்தாண்டு தினமான ஏப்பிரல் 14 ஆம் திகதி தொடங்கும் என இக்கட்சிகள் அறிவித்துள்ளன

இதுவரை மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்து வந்த அரசியல் கட்சிகள் திடீரெனத் தீவிரவாதத்தை ஆதரிப்பது அரசியல் அவதானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது

# எல்லை தாண்டும் முயற்சியை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தியது

(முசாரபாத்)

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீர் பிரதேசத்திலிருந்து எல்லையைக் கடந்து ஜம்மு காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் ராஜா முசபாரும் அவரது பதின்நான்கு சகாக்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீர் மாநிலத்தின் முதல்வர் சர்தார் அப்துல் கயூம் மேலும் தகவல் தருகையில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் எல்லை தாண்டும் பேரணி தோல்வி அடைந்து விட்டதாகவும், பேரணியைத் தடுக்க பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றதாகவும் குறிப்பிட்டார் இப் பேரணியை தடுக்கும் நோக்கில்சுமார் ஐந்நூறு பேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஐந்து பேர் எல்லையைக் கடந்து ஜம்மு காஷ்மீருக்குள் பிரவேசித்திருப்பதாக ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது. எனினும் இதனை ஊர்ஜிதம் செய்ய இயலவில்லை,

# ஈராக்கிற்கு ஆயுத விற்பனை; எட்டுப் பேர் கைது

(லொஸ் ஏஞ்ஜலஸ்)

ஒன்பது கோடியே அறுபது லட்சம் டொலர் ஆயுதங்களை ஈராக்கிற்கு விற்பனை செய்ய முயன்ற முன்னாள் உயர்மட்ட போலந்து அதிகாரிகள் ஆறு பேரும், கலிபோர்ணியாவைச் சேர்ந்த இருவரும் அமெரிக்க சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ''லொஸ் ஏஞ்ஜலஸ்டைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

போலந்தின் முன்னாள் இராணுவத்தளபதி ஒருவரும், முன்னாள் அமைச்சரவை உறுப்பினர்கள் இருவரும் கடந்த 10 ஆம் திகதி கைதாகினர்.

பிராங்க் போர்ட் ஹோட்டலொன்றில் ஆயுத ஒப்பந்தத்தை இவர்கள் இரகசிய சுங்கப் பிரதிநிதிகள் குழு ஒன்றுடன் கைச்சாத்திட்டதாக அறிவிக்கப்படுகிறது

4000 கிரனேட் லான்சர்கள் 1000 கைக்களவான விமான எதிர்ப்பு ஏவுகணைகள், 73,000 ரைபிள்கள் இந்த ஒப்பந்தத்தில் அடங்குகின்றன,

# பாக்தாத்தின் அறிவிப்பு உண்மையானதென முடிவு

(நியூயோர்க்)

ஏவுகணைகள் ரசாயனக் கருவிகள் மற்றும் உயிரியல் சார்ந்த ஆயுதக் கருவிகளின் அழிப்புத் தொடர்பாய் பாக்தாத் வெளியிட்டுள்ள அறிவிப்பு உண்மையானது தான் என்று ஈராக்கிற்கான ஐ நா. ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட குழு முடிவுக்கு வந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

வளைகுடாப்போர் சண்டை நிறுத்த உடன்படிக்கையின் கீழ் தான். தனது ஏவுகணைகளின் இடிபாட்டுச் சிதைவுகளை புதைத்து விட்டதாக ஈராக் கூறிக்கொள்ளும் இடங்களை அந்தக்குழுவினர் நேரில் போய் பார்த்து கண்காணித்த பின்னர் அக்குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

# இந்திய விஜயத்தை முடித்து ரணில் திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயமொன்றைமேற்கொண்டிருந்த சிறிலங்காவின் கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுகொழும்புதிரும்பினார்.

இந்திய விஜயத்தின் போது ரணில் விக்கிரமசிங்கா-இந்திய இலங்கை உறவுகள் குறித்தும் தமிழகத்திலிருக்கும் தமிழ் அகதிகள் குறித்தும் இந்தியப் பிரதமர் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவர்த்தை நடத்தியது தெரிந்ததே.

இவர் தனது விஜயத்தின் போது இந்தியாவில், ஓய்வு பெறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்தார்.

# சங்கீத ஆசிரியர்களுக்கு

## பாண்டிச்சேரியில்

# இலங்கைத் தமிழர்களை பதிவுசெய்யப் பணிப்பு

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியிலும், காரைக்காலிலும் உரிய பயண ஆவணங்களின்றி தங்கியிருக்கும் இலங்கை தமிழர்களை அருகிலுள்ள காவல் நிலையத்தில் அல்லது வெளிநாட்டவர் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

வரும் ஞாயிற்றுக் கிழமைக்கு முன் பதிவு செய்ய தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பாண்டிச்சேரி அரசு செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதி நினைவு

(யாழ்ப்பாணம்)

தியாகத் தீபம் அன்னை பூபதியின் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த நான்காம் ஆண்டின் நினைவுநாள் நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நினைவஞ்சலிக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அன்னை பூபதியின் நிகழ்வில் மட்டு-அம்பாறைமாவட்ட மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு.தமிழன்பன், யாழ்பல்கலைக்கழக பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன், மருத்துவபீட பேராசிரியர்,மருத்துவபீட சிரேஷ்ட மாணவ ஆலோசகர் டாக்டர் சிவபாலன், விஞ்ஞானபீட மாணவ ஒன்றிய தலைவர் உருத்திரமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

இந் நிகழ்வின் கலை நிகழ்ச்சியாக ''அணையாத தீபம்'' எனும் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. நேற்று மாலை 2.30 மணி முதல் ஆறுமணிவரை நடைபெற்ற மேற்படி அன்னை பூபதியின் நன்காம் ஆண்டு நிகழ்வில் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். (ச

# சிகரட் வான் கொள்ளை; இராணுவ சிப்பாய் கைது

(பலாங்கொட)

பெலிகுலோயா தங்கு விடுதிக்கு முன்பாக சிகரட் வான் ஒன்றை வழிமறித்து ரூபா 39,820 ஐக் கொள்ளையிட்ட குற்றத்தின பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், அவரது மற்றொரு சகாவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று பலாங்கொட பொலிசார் குருவட்ட பொலிசாரின் உதவியுடன் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிகரெட் வானுக்குள் அத்துமீறிப் புகுந்த இவ்விருவரும் துப்பாக்கி முனையில் வான் சாரதியையும், விற்பனையாளரையும் மிரட்டி வானைத் தனியான இடமொன்றிற்கு ஓட்டிச் சென்றனர் எனவும் - அங்கு வைத்து விற்பனையாளரிடமிருந்த பணத்தை அபகரித்துக் கொண்டுமோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பிச் சென்றனர்

# ஆண்டு நிறைவு

## நிறைவு

சுவாமி சாந்தானந்தாவின் பிறந்த தினவிழாவும் இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் வரும் 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது

# தீவக ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்குத் தொடர்ந்தும் பங்குனி மாத சம்பளம் வழங்கப்படும் என யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களுக்கான பங்குனி மாத சம்பளம் அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி செல்லாத விடத்து வழங்கப்படமாட்டாது என முன்னர் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. ஆனால் தொடர்ந்தும் கடந்த பங்குனி மாத சம்பளம் வழங்கப்படும் என பணிப்பாளர் நேற்று தெரிவித்தார். (ச,க)

## வீரச்சாவு

வத்தினர் பதுங்கியிருந்து தாக்கியபோது ஏற்பட்ட மோதலில் போராளியொருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இம்மோதலில்வீரச்சாவைதழுவிக் கொண்டவர் ஜெகநாத் [துரைசிங்கம் பிரபாகரன் வல்வெட்டித்துறை] ஆவர். இதனைத் தொடர்ந்து இதே இடத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் சித்தன் (பொன்னுச்சாமி ஜெயராம் பூவரசங்குளம் வவுனியா) எனும் போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவ்விரு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ராஜீவ்

இந்த நிலையில் அமைச்சர் சோலங்கி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாக லோக்சபாவில் அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் சோலங்கி இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சந்தித்த பின்பே தமது ராஜினாமாவைச்சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு சோலங்கி குஜராத் முதல்வராக முன்னர் பதவி வகித்தவர். இவர் கடந்த ஆண்டிலேயே வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

## கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3-00 மணிக்கு புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த கருத்தரங்கில் ''தாவரசாகிய அழிவும் மனித வாழ்வும்'' என்ற தலைப்பில் தாவரவியற்றுறை தலைவர் திருமதி ஏ. பீ. அருட்சந்திரன் அவர்கள் உரையாற்றுவார்.

## உயிரியல் வாயு கூடங்கள்

எரிபொருள், மின்விநியோகம் எதுவுமற்ற நிலையில் சக்தி வளத்திற்கான ஒரு மாற்றீடாகப் பயன்படும் உயிரியல் வாயுவினைப் பெறுவதற்கான உயிரியல் வாயு கூடங்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் செம்மலை, அளம்பில், ஸ்கந்தபுரம், வன்னேரிக்குளம், கிராஞ்சி, கற்சிலைமடு, வட்டக்கச்சி, புதுக்குடியிருப்பு, சண்டிலிப்பாய், கோப்பாய், திருநெல்வேலி, கிளிநொச்சி விவசாய பீடம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளது

## இன்றைய போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான இன்றைய போட்டியில் சிறீ முருகன் அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது இப்போட்டி இன்று மாலை 3 00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

போய் பார்த்து கண்காணித்த பின்னர் அக்குழுவின் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் நிகழ்வில் மட்டு-அம்பாறைமாவட்ட மக்கள் உறவுக் கொள்கை முன்

எனும் நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. நேற்று மாலை 2.30 மணிமுதல் ஆறுமணிவரை நடைபெற்ற மேற்படி அன்னை பூபதியின் நன்காம் ஆண்டு நிகழ்வில் நூற்றுக்கணக்கான பல்கலைக் கழக மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். (ச

தழுவிக்கொண்டார். இவ்விரு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

புரம், வன்னேரிக்குளம், கிராஞ்சி, கற்சிலைமடு, வட்டக்கச்சி, புதுக்குடியிருப்பு, சண்டிலிப்பாய், கோப்பாய், திருநெல்வேலி, கிளிநொச்சி விவசாய பீடம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளது

# இந்திய விஜயத்தை முடித்து ரணில் திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவிற்கு விஜயமொன்றைமேற்கொண்டிருந்த சிறிலங்காவின் கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுகொழும்புதிரும்பினார்.

இந்திய விஜயத்தின் போது ரணில் விச்கிரமசிங்கா-இந்திய இலங்கை உறவுகள் குறித்தும் தமிழகத்திலிருக்கும் தமிழ் அகதிகள் குறித்தும் இந்தியப் பிரதமர் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவர்த்தை நடத்தியது தெரிந்ததே.

இவர் தனது விஜயத்தின் போது இந்தியாவில், ஒய்வு பெறும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டார நாயக்காவையும் சந்தித்தார்.

# சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரி சம்பளம்

(யாழ்ப்பாணம்)

தரம் நான்கு, சங்கீத ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோருக்கு பட்டதாரிகளுக்கான சம்பளம்வழங்கப்படவுள்ளதாக யாழ் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாகத் தரம் நான்கு சங்கீத ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் பலர் இதனால் நன்மையடையவுள்ளனர், இவ் ஆசிரியர்களுக்கு இம் மாதம் முதல் பட்டதாரிச் சம்பளத்திட்டத் திற்கமைய சம்பளம் வழங்கப் படவுள்ளது.

# சிகரட் வான் கொள்ளை; இராணுவ சிப்பாய் கைது

(பலாங்கொட)

பெலிகுலோயா தங்கு விடுதிக்கு முன்பாக சிகரட் வான் ஒன்றை வழிமறித்து ரூபா 39,820 ஐக் கொள்ளையிட்ட குற்றத்தின பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவரும், அவரது மற்றொரு சகாவும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளியன்று பலாங்கொட பொலிசார் குருவட்ட பொலிசாரின் உதவியுடன் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிகரெட் வானுக்குள் அத்துமீறிப் புகுந்த இவ்விருவரும் துப்பாக்கி முனையில் வான் சாரதியையும், விற்பனையாளரையும் மிரட்டி வானைத் தனியான இடமொன்றிற்கு ஓட்டிச் சென்றனர் எனவும் - அங்கு வைத்து விற்பனையாளரிடமிருந்த பணத்தை அபகரித்துக் கொண்டுமோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பிச் சென்றனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்த வான் சாரதியும், விற்பனையாளரும் கொடுத்த தகவலையடுத்து வீதிகளில் வாகனங்களை மறித்து சோதனையிட்ட பொலிசார் சம்பந்தப்பட்ட இருவரையும் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் கைது செய்தனர் இவர்களிடமிருந்து பணமும், ஒரு கிறிஸ்கத்தியும் பொலிசாரால் பெறப்பட்டுள்ளது

### வறுமை

நாற்பத்திமூவாயிரத்து எழுநூற்றிமுப்பத்திநான்கு பேர் இருப்பதாக புனரமைப்புபுனர்வாழ்வு அமைச்சின் ஆய்வின் போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து இக்குடும்பங்களுக்கான உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகள் யாவும் இன்றுமுதல் நிறுத்தப்பட்டுள்ளது

### அன்னை

ணிப் பொறுப்பாளர், வடமராட்சி கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், வட்டவைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர்.

### விசர்நாய்க்கடி

பட்டது.

திரு சீ. வீ. கே. சிவஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யாழ். மாவட்டத்தின் அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகளும், சுகாதார, உள்ளூராட்சி, மிருக வைத்தியம், நகர சபைகள், மாநகரசபைகள் போன்றவற்றின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர்.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன்சிறப்புரையாற்றினார்.

இக் கருத்தரங்கில், யாழ். மாவட்டத்தில் இருக்கும் மக்கள் தம்மால் வளர்க்கப்படும் நாய்களைக் கட்டி வளர்க்க வேண்டும் என பொதுமக்களை வேண்டிக் கொள்வதெனவும், மாவட்டத்திற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம்பெற ஆவன செய்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது

மாவட்ட ரீதியில் இப்பிரச்சினை தொடர்பான அனைத்து உடனடி நடவடிக்கைகளையும் எடுக்கும் பொருட்டு ஏழுபேர் கொண்ட நடவடிக்கைக் குழுவும் கருத்தரங்கில் தெரிவு செய்யப்பட்டது.

# ஆண்டு நிறைவு

## நிறைவு

சுவாமி சாந்தானந்தாவின் பிறந்த தினவிழாவும் இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்ளது

### ராஜீவ்

இந்த நிலையில் அமைச்சர் சோலங்கி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாக லோக் சபாவில் அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் சோலங்கி இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சந்தித்த பின்பே தமது ராஜினாமாவைச்சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு சோலங்கி குஜராத் முதல்வராக முன்னர் பதவி வகித்தவர். இவர் கடந்த ஆண்டிலேயே வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது

# இன்றைய போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான இன்றைய போட்டியில் சிறீ முருகன் அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது இப்போட்டி இன்று மாலை 3.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.


# “சஞ்சீவி”

## புத்தாண்டு மலிவு விற்பனை

இல்லத்தரசிகளே

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான

❋ தையல் இயந்திரங்கள்

❋ வீட்டுத்தளபாடங்கள்

போன்றவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்

## “சஞ்சீவி”

மரத் தளபாட விற்பனை நிலையம்,

இல. 31, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

(2348)


# தியாக பூபதி அன்னை

## தமிழ்த்தாயின்

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தீரமிகு தியாகிகளை தந்தாள் எம் ஈழ அன்னை
சிறந்த நல் வீரர்களை வளர்த்தெடுத்தாள் — அவ்வழியில்
சீலமிகு தியாகத்தால் சிறந்தார் எம் பூபதி அன்னை
வீரமிகு பெண்ணாக திகழ்ந்தார் மேதினி வியக்க.

அறவழிப் போரில் ஆகாரம் இன்றி அமர்ந்தார்
ஆறைந்து நாட்கள் அனுதினம் நம் தமிழீழவர்க்காக - உருக்குலைந்தார்
செந்தமிழன்னையின் வெந்துயர் கண்டுமே வெகுண்டார்
இந்தியப் படையினர் கெடுபிடியிடையேயும் திடமாய் இருந்தார்.

அன்னையர் முன்னணித் தானைத் தலைவியாய் திகழ்ந்த எம்
அன்னை பூபதி அருந் தியாகம் - மேதினி வியக்கின்றது
வெந்தும் பொலியும் தங்க போல வீரப் பெண்ணாய்த் திகழ்ந்து
நொந்துபோன மக்கள் வாழ விடுதலைத் தீய்க்கு ஆகுதியானார்.

வேலணை பல நோ. கூ. சங்கம்.

(சி/ 4126)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.